தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

28.02.2013 A.M

## மேட்டூரில் தண்ணீர் திறப்பு அதிகரிப்பு



மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா மாவட்டங்களின் பாசனத் தேவைக்காகத் திறக்கப்படும் தண்ணீரின் அளவு புதன்கிழமை காலை 7 மணியளவில் வினாடிக்கு 6 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

தண்ணீர் பற்றாக்குறையால், டெல்டா மாவட்டங்களில் கருகும் நெற்ப் பயிர்களைக் காப்பாற்ற, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து, மேட்டூர் அணையிலிருந்து பிப்ரவரி 4ஆம் தேதி முதல் 8ஆம் தேதி வரை டெல்டா மாவட்டங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

பின்னர், நீதிமன்ற உத்தரவின்படி, தமிழகத்துக்கு 2.44 டிஎம்சி தண்ணீரை கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்து கர்நாடக அரசு திறந்துவிட்டது.

இதைத் தொடர்ந்து, மேட்டூர் அணையின் நீர்மட்டம் சற்று உயர்ந்தது. இந்த நிலையில், காவிரி டெல்டா மாவட்டங்களின் பாசனத் தேவைக்காக, புதன்கிழமை காலை 7 மணியளவில் அணையிலிருந்து வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

புதன்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 33.99 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 694 கன அடி வீதம் தண்ணீர் வருகிறது. நீர் இருப்பு 9.20 டிஎம்சியாக இருந்தது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 33.80 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 33.80 அடியாக இருந்தது.
அணைக்கு விநாடிக்கு 150 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 222 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.58 டி.எம்.சி.

## விவசாயம், தொழில்துறைக்கு ரூ.7,254 கோடி கடன்! வங்கி கடன் திட்ட அறிக்கை வெளியீடு

திருப்பூர் மாவட்டத்துக்காக 2013-14 ஆம் ஆண்டின்
வளம் சார்ந்த வங்கிக் கடன் திட்ட அறிக்கையில் பயிர்க் கடன் மற்றும் நீண்டகால விவசாயக் கடனாக ரூ.2,215.03 கோடியும், சிறு, குறுந்தொழில்களுக்கு ரூ.4,312.43 கோடியும், இதர முன்னுரிமை கடன்களுக்கு ரூ.727.28 கோடியும் என மொத்தம் ரூ.7,254.75 கோடி கடனாக அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

÷நபார்டு வங்கி சார்பில் திருப்பூர் மாவட்டத்துக்கான 2013-14-ம் ஆண்டுக்கான வளம் சார்ந்த வங்கிக் கடன் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. திருப்பூர் ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாதாந்திர வங்கியாளர்கள் கூட்டத்தில் வங்கிக் கடன் திட்ட அறிக்கையை ஆட்சியர் கு.கோவிந்தராஜ் வெளியிட, அதை சென்னை ரிசர்வ் வங்கி உதவி பொதுமேலாளர் ஏ.எஸ்.பிள்ளை பெற்றுக்கொண்டார்.

இதுகுறித்து நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் ஸ்ரீராம் பேசியது:

÷அரசு துறைகள், வங்கிகள் அதிகாரிகளின் ஆலோசனைப்படி திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மொத்த வளம் சார்ந்த கடன் ஆற்றல் மதிப்பீடு ரூ.7254.75 கோடி தொகையில் 30.53 சதவீதம் (2,215.03 கோடி) பயிர்க் கடன் மற்றும் நீண்ட கால விவசாயக் கடன்களாக மதிப்பிடபட்டுள்ளது. பயிர்க் கடனுக்கான மதிப்பீடு ரூ.1190.25 கோடி என்பது நடப்பு ஆண்டின் மதிப்பீட்டைக் காட்டிலும் 35.42 சதவீதம் அதிகம்.

இந்தத் திட்டத்தில் பண்ணை சாரா சிறு, குறுந்தொழில்கள் உள்ளிட்ட தொழில்துறைக்கு துறைக்கு ரூ.4,312.43 கோடியும், இதர முன்னுரிமை கடன்களுக்கு 727.28 கோடியும் கடன் வழங்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

## வேளாண்துறையில் அவசர சீரமைப்பு அவசியம்

வேளாண்துறையில் அவசரமாக சீரமைப்பு மேற்கொள்ள வேண்டுமென்று நாடாளுமன்றத்தில் புதன்கிழமை தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு முந்தைய நாள் பொருளாதார ஆய்வறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவது வழக்கம்.

இதில் கடந்த ஓராண்டில் இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் கூறப்படும். இதன்படி இந்த ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கை மத்திய நிதியமைச்சகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதில் வேளாண்துறை குறித்து கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 5 ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட வேளாண் வளர்ச்சி 4 சதவீதம் குறைந்துள்ளது. எனவே இத்துறையில் அவசர சீரமைப்பு அவசியமாகிறது. முக்கியமாக அதிகமாகப் பயிரிடுவதும், வேளாண்துறை உள்கட்டமைப்பில் தனியார் துறை பங்களிப்பை அதிகரிப்பதும் அவசியம். அப்போதுதான் வளர்ந்து வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளை ஊக்குவிக்க முடியும்.

11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் (2007-12) வேளாண்துறை 3.6 சதவீத வளர்ச்சியையே எட்டியுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட 4 சதவீதம் குறைவு. எனினும் 9-வது 10வது ஐந்தாண்டுத் திட்டங்களில் இருந்ததைவிட இப்போது வேளாண்துறை கூடுதலாக வளர்ச்சி பெற்றுள்ளது. அந்த இரு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் வேளாண்துறை உற்பத்தி என்பது முறையே 2.5, 2.4 சதவீதமாகவே இருந்தது.

எனினும் இத்துறையில் வளர்ச்சி நிலையானதாக இருக்க வேளாண் உற்பத்தித் திறனை அதிகரிப்பது அவசியம். வேளாண் பொருள்களுக்கு ஏற்புடைய விலை கொள்கை, வேளாண் உற்பத்திப் பொருள்களை பாதுகாப்பாக சேமிப்பது, பொது விநியோக முறையை சீரமைப்பது, வேளாண் பொருள்கள் சந்தைப்படுத்துவதை முறைப்படுத்துவது ஆகியவை மிகமுக்கியம்.

வேளாண்துறையில் ஆராய்ச்சி மேம்பாட்டுப் பணிகளை திறமையாக மேற்கொள்வது, விவசாயிகளுக்கு கடன், விதை, உரம் உள்ளிட்ட இடுபொருள்களை உரியகாலத்தில் வழங்குவது உள்ளிட்டவற்றை முறைப்படுத்த வேண்டும்.

பெருகி வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிப்பது என்பது பெரும் சவாலாகவே உள்ளது. நாட்டின் ஒவ்வொரு தனிநபர்களுக்கு கிடைக்கும் உணவுப் பொருளின் அளவு ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருவது கவலையளிக்கிறது.

பருவநிலையில் எதிர்பாராத வகையில் ஏற்படும் மாறுபாடு வேளாண் உற்பத்தியை வெகுவாக பாதிக்கிறது. எனவே பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டும்.

சமீபத்தில் சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டை மத்திய அரசு அனுமதித்துள்ளது.

இது விவசாயிகளுக்கு பயனளிப்பதாக இருக்கும். வேளாண்துறையில் புதிய முதலீடுகள், புதிய தொழில்நுட்பங்களுக்கு வழிவகுக்கும். விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களை எளிதாக சந்தைப்படுத்தலாம் என்று பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிருஷ்ணகிரி அருகே யானைகள் அட்டகாசம்; விளைநிலங்கள் சேதம்

கிருஷ்ணகிரி அருகே யானைகள் கூட்டம் விளைநிலங்களில் புகுந்து பயிர்களை சேதப்படுத்துவதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

கர்நாடக மாநிலம், பன்னர்கட்டா வனப் பகுதியிலிருந்து சுமார் 45-க்கும் மேற்பட்ட யானைகள் சில மாதங்களுக்கு முன்பு தளி வழியாக கிருஷ்ணகிரி மாவட்டத்துக்குள் நுழைந்தன.

இந்த யானைகள் தண்ணீர், இரையைத் தேடி அவ்வப்போது வனப் பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களுக்குள் புகுந்து, அங்குள்ள விளை நிலங்களைச் சேதப்படுத்தி வருவதோடு, விவசாயிகளையும் தாக்கி வருகின்றன. இந்த நிலையில், ஆந்திர மாநில எல்லைப் பகுதியில் உள்ள கிருஷ்ணகிரி மாவட்டம், நல்லமான்சந்தை, கன்னிகானேரி, காளிகோயில் பகுதியில் 12 யானைகள் தொடர்ந்து முகாமிட்டுள்ளன.

இந்த யானைகள் செவ்வாய்க்கிழமை இரவு வனப் பகுதியிலிருந்து வெளியேறி, அந்தப் பகுதியில் ஒரு புளியமரம், 400-க்கும் மேற்பட்ட பப்பாளி மரங்கள், 30-க்கும் மேற்பட்ட மாமரங்கள் ஆகியவற்றைச் சேதப்படுத்தின.

யானைக் கூட்டத்தை கிருஷ்ணகிரி வனச் சரகர் பாபு தலைமையிலான வன ஊழியர்கள், பட்டாசு வெடித்தும், அதிக வெளிச்சம் கொண்ட டார்ச் கொண்டு ஒளிரச் செய்தும் வனப் பகுதிக்கு விரட்டினர். யானைகள் அவ்வப்போது விளை நிலங்களைச் சேதப்படுத்தி வருவதால், இந்தப் பகுதி விவசாயிகள் பெரும் கலக்கம் அடைந்துள்ளனர்.

## அரசு விதைப் பண்ணையில் ஆட்சியர் ஆய்வு

பல்லடம் பொங்கலூர் ஒன்றியம் தேவனம்பாளையத்தில் உள்ள அரசு விதைப் பண்ணையில் திருப்பூர் ஆட்சியர் கோவிந்தராஜ் புதன்கிழமை ஆய்வு செய்தார்.

÷கடந்த 1956-ம் ஆண்டு தேவனம்பாளையத்தில் 40 ஏக்கர் நிலப்பரப்பில் துவக்கப்பட்ட அரசு விதைப் பண்ணை, கடந்த 10 ஆண்டுகளாக செயல்பாடின்றி கிடந்தது. இதுகுறித்து அறிந்த திருப்பூர் ஆட்சியர் கோவிந்தராஜ் அரசு விதைப் பண்ணையை செயல்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொண்டார். இந் நிலையில், பண்ணையில் நடைபெறும் பணிகளை ஆட்சியர், கேபிள் டிவி வாரியத் தலைவர் கே.ராதாகிருஷ்ணன், பல்லடம் சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.பரமசிவம், ஆகியோர் ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து ஆட்சியர் கூறியது: தேவனம்பாளையம் அரசு விதைப் பண்ணையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டப் பணியாளர்களை கொண்டு விவசாய பணிகள் துவக்கப்பட்டுள்ளன. வேம்பு, புளியன், வாகை, புங்கன் போன்ற நாற்றுக்கள் உற்பத்தி செய்யும் பணி நடைபெறுகிறது.

÷ரூ.80 ஆயிரம் மதிப்பில் ஒரு பண்ணை குட்டை அமைக்கப்பட்டுள்ளது. பண்ணையின் நீர் ஆதாரத்தை மேலும் வலுப்படுத்த பொதுமக்கள் பங்களிப்புடன் தன்னிறைவு திட்டத்தின்கீழ் 2 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்படவுள்ளது.

÷பண்ணையில் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்க தென்னை நாற்றங்கால் அமைக்கும் பணி செயல்படுத்தப்பட்டுள்ளது. மக்காசோள வீரிய ஒட்டு விதைகள் உற்பத்தி பணி அடுத்த நிதியாண்டில் துவங்கும் என்றார்.

÷ஆட்சியரின் வேண்டுகோளை ஏற்று, புதிய ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க பொதுமக்களின் பங்களிப்பு நிதியாக முதல்வர் ஜெயலலிதாவின் 65-வது பிறந்த நாள் விழா நினைவாக திருப்பூர் புறநகர் மாவட்ட அதிமுக சார்பில் தமிழக அரசு கேபிள் டிவி நிறுவன தலைவர் கே.ராதாகிருஷ்ணன், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் எஸ்.சிவாச்சலம் உள்பட பலர் நிதியுதவி அளிப்பதாக உறுதி அளித்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

28.02.2013 A.M

## கரும்பு விவசாயிகளுக்குஆலைகள் ரூ.9,340 கோடி பாக்கி



புதுடில்லி:நடப்பு சர்க்கரை பருவத்தில் (அக்.,-செப்.,), சென்ற ஜனவரி, 15ம் தேதி வரையிலுமாக, உள்நாட்டில், சர்க்கரை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகை, 9,340 கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது.

இதுதவிர, கடந்த ஆண்டுகளின் நிலுவை தொகை, 488 கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளதாக, மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ், பார்லிமென்டில் தெரிவித்தார்.நடப்பு பருவத்தில், சென்ற ஜனவரி 15ம் தேதி வரையிலுமாக, கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய, மொத்த நிலுவைத் தொகையில், உத்தர பிரதேசத்தின் பங்களிப்பு, 5,456 கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது.இதையடுத்து, கர்நாடகா (1,655 கோடி ரூபாய்), ஆந்திரா (426 கோடி ரூபாய்), தமிழகம் (390 கோடி ரூபாய்), குஜராத் (362 கோடி ரூபாய்), மகாராஷ்டிரா (308 கோடி ரூபாய்), பீகார் (275 கோடி ரூபாய்), உத்தராஞ்சல் (271 கோடி ரூபாய்) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## மணிமுத்தாறில் முழு வீச்சில் நடந்து வரும் தேசிய மீன் விதை பண்ணை அமைக்கும் பணிகள்.

அம்பாசமுத்திரம்:மணிமுத்தாறில், தேசிய மீன் விதை பண்ணை அமைக்கும் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது.

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறில் 12.70 கோடியில் மீன் விதை பண்ணை அமைகிறது.
மணிமுத்தாறு அணை அருகே மீன் உற்பத்திக்காக 5 தொட்டிகளும், மலையடிவாரத்தில் மீன் வளர்ப்புக்காக 10 ஏக்கர் பரப்பளவில் பெரிய அளவிலான 6 தொட்டிகளும் அமைக்கப்படுகிறது. இதில் ஒவ்வொரு தொட்டிகளும் 10 மீட்டர் நீளம், 20 மீட்டர் அகலத்தில் 10 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, மொத்தம் 60 தொட்டிகள் உருவாக்கப்படுகிறது.
இப்பணிகள் கடந்த மாதம் துவக்கப்பட்டு, ஜே.சி.பி., இயந்திரங்கள் மூலம் பெரிய குழிகள் தோண்டப்பட்டு, கான்கிரீட் போடும் பணிகள் நடந்து வருகிறது. வரும் ஏப்ரல் மாதத்திற்குள் இப்பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
மணிமுத்தாறு அணை அருகே உற்பத்தி செய்யப்படும் மீன்கள், இத்தொட்டியில் வளர்க்கப்பட்டு விற்பனை செய்யப்படும் என மீன் வளத்துறையினர் தெரிவித்தனர்..

## மக்காச் சோளம் வரத்து குறைவு

சின்னசேலம்: சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காச்சோளம் வரத்து குறைந்தது.சின்னசேலம் மார்கெட் கமிட்டிக்கு நேற்று 200 மூட்டை மக்காச் சோளம் விற்பனைக்கு விவசாயிகள் கொண்டுவந்தனர். அதிகபட்ச விலையாக மூட்டை 1,371 ரூபாய்க்கும், குறைந்தபட்சம் 1,340 என விலை போனது.கடந்த வாரம் மக்காச்சோளம் 1,496 மூட்டைகள் 20 லட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது

## 30 ஏக்கர் கரும்பு தோட்டம் தீயில் எரிந்து நாசம்

அய்யனேரி:ஏரிக்கரையோரம் இருந்த, 30 ஏக்கர் கரும்பு தோட்டம், மர்மமான முறையில் தீப்பிடித்து எரிந்தது.
ஆர்.கே.பேட்டை ஒன்றியம், ஸ்ரீவிலாசபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணி, நரசிம்மன், பிச்சாண்டி, காந்தி உட்பட, ஏழு விவசாயிகளின் நிலம் அய்யனேரி ஏரிக்கரையோரம் உள்ளது. இவர்கள், 30 ஏக்கர் நிலத்தில், கரும்பு பயிர் செய்திருந்தனர். தற்போது, கரும்புகள் வெட்டும் பருவத்தில் உள்ளன.
இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை, 6:00 மணிக்கு, மர்மமான முறையில், சுப்பிரமணியின் கரும்பு தோட்டம், தீப்பிடித்து எரிய தொடங்கியது.
காற்று பலமாக வீசியதால், தீ மளமளவென பரவி அடுத்தடுத்துள்ள, ஆறு விவசாயிகளின், கரும்பு தோட்டமும் தீப்பிடித்து எரிந்தது. தகவல் அறிந்த, சோளிங்கர் தீயணைப்பு துறை வீரர்கள், இரண்டு மணி நேரம் போராடி, தீயை அணைத்தனர். அதற்குள், 30 ஏக்கர் கரும்பு தோட்டமும்,

தீயில் கருகியது.

இதுகுறித்து, பள்ளிப்பட்டு வருவாய் துறையினர் மற்றும் ஆர்.கே.பேட்டை போலீசாரும், சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரித்து வருகின்றனர்.கட்டாய கல்வி குறித்து மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி

திருவள்ளூர்:

இலவச கட்டாயக் கல்வி குறித்து, பள்ளி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

அனைவருக்கும் கல்வி இயக்ககம், திருவள்ளூர் ஒன்றியம் சார்பில், இலவச கட்டாயக் கல்வி உரிமை சட்டம் குறித்து, விழிப்புணர்வு இயக்கம் நடைபெற்றது. அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின், மேற்பார்வையாளர் சந்திரன் வரவேற்றார்.

கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் மோகனகுமார், ஒன்றியக் குழு தலைவர் சந்திரசேகர், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் சுந்தர் ராஜ், உதவி தொடக்கக் கல்வி அலுவலர் குமார் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பள்ளி மாணவ, மாணவியர், 600 பேர் பங்கேற்ற இப்பேரணி, ஈக்காடு வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் துவங்கி, சி.எஸ்.ஐ., பள்ளியில் நிறைவடைந்தது.

பூண்டி ஒன்றியம் சார்பில், நடந்த பேரணிக்கு, ஒன்றிய குழு தலைவர் அம்மு மாதவன் தலைமை வகித்தார். பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் சூரியநாராயண மூர்த்தி, தலைமை ஆசிரியை பிரியதர்ஷினி, அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் மேற்பார்வையாளர் ரத்தின இளங்கோ ஆகியோர் பங்கேற்றனர். இப்பேரணியில், மாணவ, மாணவியர், 500 பேர் பங்கேற்றனர்.

திருத்தணிதிருத்தணியில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணிக்கு, வட்டார மைய மேற்பார்வையாளர் முருகேசன் தலைமை வகித்தார். இதில், நகராட்சி தலைவர் சவுந்தர்ராஜன், ஒன்றியக் குழுத் தலைவர் ரவி ஆகியோர் பேரணியை துவக்கி வைத்தார். இதில், 600 மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

## காப்பீடு செய்ய தவறிய விவசாயிகள் இழப்பீடு பெற முடியாமல் தவிப்பு

கரூர்: தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்ய தவறியதால், தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியில், விவசாயிகள் இழப்பீடு பெறமுடியாமல் தவித்து வருகின்றனர். இயற்கை சீற்றம், வறட்சி உள்ளிட்ட காரணங்களினால் பயிர்கள் பாதிப்புக்கு உள்ளாவதை ஈடுசெய்ய, மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து, தேசிய வேளாண் பயிர் காப்பீடு

திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன. இதில் காப்பீடு தொகையின், 50 சதவீதத்தை அரசே செலுத்துகிறது.

கரூர் மாவட்டத்தில் நெல், கரும்பு, வாழை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு காப்பீடு செய்யப்படுகிறது. இதில் நெல்லுக்கு காப்பீட்டு தொகையாக சிறு, குறு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 126 ரூபாயும், பெரும் விவசாயிகளுக்கு, 140 ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கரும்பு, வாழை போன்ற பயிர்களுக்கு, பகுதி ஏற்றவாறு, சிறு, குறு மற்றும் பிற விவசாயிகளுக்கு காப்பீடு கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில், 1,160 விவசாயிகள், 96 ஆயிரம் ரூபாய் மட்டுமே காப்பீடு செய்துள்ளனர். கரும்பு, வாழை போன்ற பணப்பயிர்களுக்கு மட்டுமே பெரும்பாலும் காப்பீடு செய்கின்றனர். ஆனால் நெல் சாகுபடி செய்பவர்கள் காப்பீடு செய்ய ஆர்வம் காட்டவில்லை.

இதுகுறித்து வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தற்போது வரை, ஒவ்வொரு மாவட்டத்திலும், 10 சதவீததுக்கு குறைவான விவசாயிகளே இந்த காப்பீட்டு தொகையை செலுத்தியுள்ளனர். இத்திட்டத்தில் பயிர் சாகுபடி பாதிக்கும் போது, முழுமையான காப்பீடு கிடைக்கும். ஆனால் அறிவிக்கப்பட்டுள்ள வகையில், பாதிப்பு ஏற்படவில்லை எனில், எதுவும் கிடைக்காது. இதனால் விவசாயிகள் இவ்வளவு தொகையினை கட்டியும், பாதிப்பு ஏற்படவில்லை எனில், பயனில்லை என்பதால் காப்பீட்டை புறக்கணிக்கின்றனர்.

கூட்டுறவுத்துறை மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம், தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவர்கள் பயிர்கடன் வழங்கும் போது, கட்டாயத்தின் பேரில் காப்பீடு செய்ய வேண்டும். ஆனால் பயிர் கடன் வழங்கும் முறையில், பல்வேறு குளறுபடிகள் இருப்பதால், வங்கிகள் காப்பீடு தொகை பிடிக்க முடியாமல் திணறுகிறது. மேலும் டெல்டா பகுதிகளில் காப்பீடு தொகையை அரசே முழுமையாக செலுத்துகிறது. ஆனால் இந்த சலுகை மற்ற பகுதிகளுக்கு கிடையாது.

அரசின் சார்பில் வழங்கப்பட்ட வறட்சி நிவாரணத்தொகை, குளித்தலை, கிருஷ்ணராயபுரம் பகுதிகளில், 13 கிராமங்களைச் சேர்ந்த, 304 விவசாயிகளில், 395 ஏக்கருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற பகுதிகளுக்கு மீண்டும் அறிவித்தால் மட்டுமே கிடைக்க வாய்ப்புள்ளது. ஏற்கனவே காப்பீடு செய்திருந்தால், இழப்பீடு தொகை காப்பீடு நிறுவனங்கள் மூலம் பெற்றிருக்க முடியும். காப்பீடு செய்ய தவறியதால், நஷ்டத்தை விவசாயிகளே தாங்கி

கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## விவசாயத்துக்கு எடுக்கப்படும் நீரோடை தண்ணீர்: மக்களுக்கும், வன விலங்குகளுக்கும் தட்டுப்பாடு

பந்தலூர்: பந்தலூர் அருகே பிதர்காடு பகுதியில் நீரோடை தண்ணீரை தேக்கி தேயிலை தோட்டத்துக்கு பாய்ச்சும் செயலால் மக்களுக்கு தண்ணீர் கிடைக்காத அபாயம் ஏற்பட்டுள்ளது.

பந்தலூர் அருகே பிதர்காடு பென்னை வனப்பகுதியை ஒட்டி தனியார் தோட்டங்கள் <உள்ளன. இதில் சந்தக்குன்னு பகுதியை ஒட்டி அமைந்துள்ள தனியார் தோட்டத்தின் வழியாக நீரோடை செல்கிறது. நீரோடை தண்ணீரை மக்கள் பயன்படுத்தி கொள்ளும் வகையில், எச்.ஏ.டி.பி. மூலம் தடுப்பணையும் கட்டப்பட்டுள்ளது. ஆனால், இப்பகுதியில் உள்ள தனியார் தோட்ட நிர்வாகம் சார்பில் பயிரிட்டுள்ள வாழை பயிர்களுக்கு தண்ணீரை பாய்ச்சும் வகையில், நீரோடையை ஒட்டி குளம் அமைத்து தண்ணீரை திருப்பி விட்டுள்ளனர். குளத்தில் நிறையும் தண்ணீரை டீசல் மோட்டார் மூலம் வாழைகளுக்கு பாய்ச்சி வருகின்றனர்.

இதனால், நீரோடையில் தண்ணீர் வராமல் பிதர்காடு எஸ்டேட், மானிவயல், பிதர்காடு பஜார், சந்தக்குன்னு, பதினெட்டுக்குன்னு பகுதி மக்கள் தண்ணீர் இல்லாமல் அவதியடைந்து வருகின்றனர். குளிப்பதற்கும் பிற தேவைகளுக்கும் தண்ணீர் இல்லாத நிலையில், பலரது கிணறுகளிலும் தண்ணீர் எடுத்து வாகனங்கள் மூலம் கொண்டுவரவேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. ஓடையில் இருந்து தண்ணீர் எடுப்பதால், வனவிலங்குகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இது குறித்து வருவாய் துறைக்கு இப்பகுதி மக்கள் புகார் கூறியும் நடவடிக்கை இல்லை. இதனால், மாவட்ட நிர்வாகத்திற்கும், முதல்வருக்கும் மனு அனுப்பியுள்ளனர். நடவடிக்கை எடுக்காத நிலையில் போராட்டத்தில் ஈடுபடவும் முடிவு செய்துள்ளனர்.

## காபி அறுவடை குறைந்ததால் ஏமாற்றம்

மஞ்சூர்: மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் நடப்பாண்டில் காபி அறுவடை குறைந்ததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர்.

மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளான மட்டக்கண்டி, தூனேரி, ஓணிக்கண்டி, கீழ்குந்தா, மந்து, பென்ஸ்டாக் உள்ளிட்ட பகுதிகளில், பல ஏக்கரில் உள்ள தேயிலை தோட்டங்களுக்கு இடையே காபி ஊடுபயிராக பயிரிடப்பட்டுள்ளது. மேலும், தமிழக-கேரள எல்லைப்பகுதிகளான கிண்ணக்கொரை, இரியசீகை, அப்பட்டி, ஒசஹட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஊடுபயிராக காபி பயிரிட்டு வருகிறது. பொதுவாக, பிப்ரவரி மாதம் காபி அறுவடை செய்யப்படும்.ஆனால், "நடப்பாண்டு துவக்கத்தில் காபி அறுவடை போதுமானதாக இல்லை' என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இது குறித்து கிண்ணக்கொரை விவசாயி குமரேஷன் கூறுகையில், "" பொதுவாக நடப்பாண்டு துவக்கத்தில் தயாராகும் காபி அறுவடை மூலம் நல்ல விலையும் கிடைத்து வந்தது. தற்போது காபி அறுவடை குறைவு. பெரும்பாலான பகுதிகளில் இதே நிலை தான் உள்ளது. காபி அறுவடை நன்றாக இல்லாத காரணத்தால் ஏமாற்றம் அடைந்துள்ளோம்," என்றார்.

## கொப்பரையில் சல்பர் பயன்படுத்தாதீர் வேளாண்துறை அதிகாரிகள் யோசனை

ஈரோடு: கொப்பரை தேங்காயில் வேதிப்பொருட்களை (சல்பர்) பயன்படுத்தினால், எண்ணெய் தரம் குறைந்து, போதிய விலை கிடைக்காது, என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். உணவு எண்ணெயிலும், அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பிலும், தேங்காய் எண்ணெய்க்கு அதிக பங்களிப்பு உள்ளன. இந்திய அளவில் கேரளா, தேங்காய் உற்பத்தியில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது. தமிழகம் இரண்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.
தமிழகத்தில் கோவை, தஞ்சை, திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்கள் தேங்காய் உற்பத்தி அதிகளவு செய்யப்படுகிறது. தற்போது, 85 சதவீதம் வரத்து அதிகரித்து, விலையும் வீழ்ச்சி அடைந்து வருவதால், விவசாயிகள் பலரும் கொப்பரை தேங்காய் உற்பத்திக்கு மாறிவிட்டனர்.
கொப்பரை தேங்காய் நல்ல தரத்தின் அடிப்படையில், வியாபாரிகள் விலை நிர்ணயம் செய்கின்றனர். எனவே, தேங்காய் எண்ணெய் பெறப்படும் கொப்பரை தேங்காயை அறுவடை செய்வதிலும், சேமிப்பதிலும் பல்வேறு தொழில் நுட்பங்களை பின்பற்ற வேண்டும். இதனால், கொப்பரை தேங்காய் நல்ல தரமாகவும், அதிக விலை கிடைக்கவும் வாய்ப்புள்ளது என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.
ஈரோடு வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை அதிகாரி கூறியதாவது:
நடப்பாண்டு தமிழகத்தில், 40 சதவீதம் தேங்காய் உற்பத்தி அதிகரித்துள்ளது. மழை துவங்கினால், தேங்காய் எண்ணெய் மற்றும் கொப்பரை உற்பத்தி பாதிக்கும். இதுபோன்ற காலகட்டத்தி ல் விவசாயிகள் கொப்பரை தேங்காய் சேமிப்பதில், சில வேதிப்பொருட்களை பயன்படுத்தி, தரத்தை

குறைத்து விடுகின்றனர். கொப்பரைக்காக அறுவடை செய்யும் போது விவசாயிகள் பல்வேறு தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். நன்கு முதிர்ந்த, பத்து - 12 மாத காய்களை அறுவடை செய்ய வேண்டும். அதில், பூச்சி தாக்கிய, குறை உடைய காய்களை தனியாக பிரித்து வைக்க வேண்டும்.

உடைக்கும் காய்களை நல்ல வெயிலில், காயவைத்து கொப்பரைகளை பிரிக்க வேண்டும். மீண்டும் அவற்றை, மூன்று நாட்கள் வரை காயவைக்க வேண்டும். தவிர்க்கும் பட்சத்தில், சேமிப்பின் போது அதிக ஈரப்பதம் காரணமாக, பச்சை பூஞ்சாணம் தாக்கி, விவசாயிகளுக்கு பெரு ம் நஷ்டத்தை ஏற்படுத்தி விடும்.

மேலும், கொப்பரைகளை பாலித்தீன் உரையிட்ட கோணிப்பைகளில் சேமிக்க வேண்டும். விவசாயிகள் பலரும் தேங்காயை விரைவாக காயவைக்க, வேதிப்பொருள் (சல்பர்) பயன்படுத்துகின்றார். இதனால், கொப்பரையில் எண்ணெய் தரம் குறைவதுவிடும். தவிர, சேமிப்பில் பூச்சி தாக்குதல் இருப்பின், டன் ஒன்றுக்கு, அலுமினியம் பாஸ்பைடு மாத்திரைகள், மூன்று கிராம் அளவில் பயன்படுத்தி, 5 - 7 நாட்கள் காற்றுப்புகாதவாறு பாதுகாப்பதன் மூலம் பூச்சி கட்டுப்படுத்தலாம். இதுபோன்ற தொழில் நுட்பங்களை பயன்படுத்தினால், நல்ல தரமான கொப்பரையை பெறுவதுடன், கூடுதல் விலை கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## அட்வான்ஸ் கார் சாகுபடிக்கு தண்ணீர் வழங்க இயலாது

ஸ்ரீவைகுண்டம்:தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசனத்தில் அட்வான்ஸ் கார் சாகுபடிசெய்ய வேண்டாம் என விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தாமிரபரணி வடிநிலக் கோட்ட செயற் பொறியாளரின் அறிவிப்பிற்கு பல்வேறு விவசாய சங்கத்தினரும் விவசாய நல அமைப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பாபநாசம் மற்றும் சேர்வலாறு அணை களிலுள்ள நீரை மின் உற்பத்தி பயன்பாட்டிற்காக மின்சாரப் பிரிவினர் இவ்விரு அணைகளையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல்,மே மாதங்களில் தாமிரபரணி பாசனத்தின் கால்வாய்கள் பராமறிப்பிற்காக மூடப்பட்டு கார் சாகுப்படிக்காக ஜூன்1ம் தேதி திறக்கப்படும். இந்த ஆண்டு முதல் முறையாக அட்வான்ஸ் கார் சாகுபடி செய்ய வேண்டாம் என பிப்.21ல் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தாமிரபரணி வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் முத்துப்பாண்டி அறிவித்தார். இந்த அறிவிப்பு விவசாயிகளை அதிர்ச்சியடைய செய்துள்ளது. இது குறித்து தாமிரபரணி நதிநீர் பாதுபாப்பு பேரவை அமைப்பாளர் நயினார்குலசேகரன் கூறியதாவது, பாபநாசம் அணையில் பிப்.26ம் தேதி நிலவரப்படி 48.25 அடியும், சேர்வலாறு அணையில் 61.65 அடியும் மணிமுத்தாறு அணையில் 80.62 அடியும் உள்ளது. மணிமுத்தாறு அணையில் 80அடிக்கு கீழ் உள்ள தண்ணீர் தூத்துக்குடி மாவட்ட சாகுபடி நிலங்களுக்கு உரிமை

பெற்றதாகும். ஆனால் பாப நாசம்,மணிமுத்தாறு மற்றும் சேர்வலாறு ஆகிய அணைகளில் தண்ணீர் இருப்பை கணக்கிட்டு 86107 ஏக்கர்களுக்கு பிசான சாகுபடிக்கு அரசால் அனுமதிகப்பட்டது. ஆனால் மணிமுத்தாறு அணையில் 80அடிக்கு கீழ் போகாதவாரு பொதுப்பணித்துறை திட்டமிட்டு தண்ணீர் விநியோகம் செய்து விவசாயிகளின் உரிமைகளை பறித்து வருகின்றது. இந்நிலையில் அட்வான்ஸ் கார் சாகுபடி செய்ய வேண்டாம் என அறிவிப்பது விவசாயிகளின் உரிமைகளை மேலும் பறிக்கும் செயலாகும். இதை கண்டித்து தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவை போராடும் என கூறினார்.

## தாழையூத்தில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி முகாம்

திருநெல்வேலி:தாழையூத்தில் நீர், நில வள திட்டத்தின் கீழ் உப்போடை நீர் வடிப்பகுதி விவசாயிகளுக்கு திறன் வளர்த்தல், மாற்று தொழில்நுட்ப மேலாண்மை பயிற்சி முகாம் நடந்தது. மானூர் வேளாண்மை உதவி இயக்குனர் சரஸ்வதி தலைமை வகித்தார். உப்போடை நீர் வடிப்பகுதி ஏரிப்பாசன சங்க தலைவர் முருகன் முன்னிலை வகித்தார். ஓய்வு பெற்ற வேளாண்மை இணை இயக்குனர்கள் ஜனார்த்தனம், சுப்பிரமணியன் பயிற்சி அளித்தனர்.
தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜாசிங், உதவி இயக்குனர் (விதைச்சான்று) அசோக்குமார், வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) ஏஞ்சலின் பொன்ராணி, வேளாண்மை உதவி செயற்பொறியாளர் மனோகரன் ஆகியோர் துறை செயல்பாடுகள் குறித்து விளக்கினர். செயல்விளக்கம், கருத்துக்காட்சி காட்டப்பட்டது.
வேளாண்மை அலுவலர்கள் சண்முகையா, சிவகுமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் அருணாசலம், செல்வகுமார், அட்மா தொழில்நுட்ப வல்லுனர்கள் காட்வின், பொருட் சிறப்பறிஞர் சகுந்தலா, இசக்கிமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வெய்க்காலிப்பட்டியில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

தென்காசி:-வெய்க்காலிப்பட்டியில் தோட்டக்கலை விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.

கடையம் வட்டார தோட்டக்கலை துறை சார்பில் கடையம் பெரும்பத்து வெய்க்காலிப்பட்டியில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் இரண்டு நாட்கள் நடந்தது. முதல் நாள் முகாமிற்கு தோட்டக்கலை துணை இயக்குநர் ராஜன் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். வெய்க்காலிப்பட்டி பஞ்.,தலைவர் அருவேல்ராஜன் முன்னிலை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குநர் வரவேற்றார்.

தோட்டக்கலை துணை அலுவலர் சீதாராமன் காய்கறி சாகுபடி குறித்தும், நெட்டாபிம் சொட்டு நீர்

பாசன நிறுவன அலுவலர் அருண்சங்கர் சொட்டுநீர் பாசனம் அமைப்பது குறித்தும் விளக்கினர். உதவி தோட்டக்கலை அலுவலர் பார்த்திபன் சோலார் விளக்கு பொறி செயல் விளக்கம் செய்து காட்டினார்.

இரண்டாம் நாள் பயிற்சியில் நெல்லை தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெயபாரதி மாலதி காய்கறி சாகுபடி மற்றும் திட்டங்கள் பற்றியும், தென்காசி கால்நடை டாக்டர் செல்வகுத்தாலிங்கம் கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு பற்றியும், ஊர்மேலழகியான் ஆர்.வி.எஸ்.பண்ணை இலக்கியநிலா தோட்டக்கலை பயிர்கள் பற்றியும் பேசினர்.

உதவி தோட்டக்கலை அலுவலர் அரசமணி நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி தோட்டக்கலை அலுவலர்கள் சாகுல்கமீது, மணிகண்டன், பார்த்திபன் ஆகியோர் செய்திருந்தனர்.

## காபி தோட்ட வேலைகள் இயந்திர மயமாகின்றன

போடி: காபி தோட்டத்தில் பழம் பறிப்பது, களை எடுப்பது, மருந்து அடிப்பதை விவசாயிகளே செய்து வந்தனர். இதனால், காலதாமதமும், பாதிப்புகளும் ஏற்பட்டன. இதனை தவிர்க்க, தோட்ட வேலைகளில் இயந்திரங்களை பயன்படுத்தும் வகையில், இயந்திரமயமாக்கும் திட்டம் மத்திய அரசால் செயல்படுத்தப்படுகிறது. தோட்டங்களின் அளவை பொறுத்தும், சுய உதவி குழுக்கள், சிறு காபி விவசாயிகளுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. 20 ஹெக்டேர் வரை காபி தோட்டம் உள்ள விவசாயிகளுக்கு, அதிபட்சம் 50 சதவீதம் மானியமாக 2 லட்சம் ரூபாயும், 20 ஹெக்டேருக்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு 25 சதவீதம் என, அதிகபட்சமாக 4.50 லட்சம் ரூபாய் வரை மானியம் பெறலாம். சிறு காபி விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் என்ற அடிப்படையில், அதிகபட்சமாக 5 லட்சம் ரூபாய் வரை பெறலாம். இதில் குழி எடுக்கும் இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம், பேட்டரி மூலம் இயங்கும் மிக எளிதாக பழம் பறிக்கும் இயந்திரம், நிழல் மரம் கவ்வாத்து செய்யும் இயந்திரம், மோட்டார் மூலம் இயங்கும் உயர் தொழில்நுட்ப விசை தெளிப்பான். நிழல் மரம் அறுக்கும் இயந்திரம், காபி உருளை தரம் பிரிக்கும் இயந்திரம், பவர் டிரில்லர், சிறிய ரக டிராக்டர், சிறிய ரக டிரான்ஸ்போர்ட்டர் அல்லது ரப்பரைஸ்ட் டிராக் கேரியர் போன்ற இயந்திரங்களுக்கு இத்திட்டத்தில் மானியம் பெறலாம். போடி காபி வாரியத்தின் முதுநிலை தொடர்பு அலுவலர் விஜயாதரன் கூறியதாவது: விபரமறியஅறிய, அருகில் உள்ள முதுநிலை தொடர்பு அலுவலர், காபி வாரியம், போடி. போன் 04546- 280 397 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## காட்டு மாடுகளால் விவசாயம்...பாதிப்பு வேதனையில் விவசாயிகள்

தாண்டிக்குடி: தாண்டிக்குடி மலைப்பகுதியில் அதிகரித்துள்ள காட்டு மாடு, பன்றிகளால் விவசாயங்கள் கேள்விக்குறியாகி உள்ளது.தாண்டிக்குடி, பண்ணைக்காடு, பூலத்தூர், பாச்சலூர், கே.சி.பட்டி, ஆடலூர், பன்றிமலை உள்ளிட்ட கீழ்மலை பகுதியில் அதிகமாக பெருகியுள்ள பன்றி, காட்டு மாடுகளால் விவசாயங்கள் அழிவை சந்தித்து வருகிறது. இம்மலைப்பகுதியின் பிரதான விவசாயமாக காபி, மலை வாழை, ஆரஞ்சு, ஏலக்காய் உள்ளது. இதற்கு மத்தியில் குறுவிவசாயமாக பீன்ஸ், அவரை, சவ்சவ் உள்ளிட்ட விவசாயங்கள் மேற்கொள்ளப்படுகிறது. கோடை காலம் துவங்கி வறட்சி நீடிப்பதால் வனப்பகுதியை விட்டு நீர்நிலையை தேடி தாழ்வான பகுதியான விவசாய நிலங்களில் இவை தஞ்சமடைந்து, விவசாய பயிர்களை சேதப்படுத்துகிறது. இவற்றை கட்டுபடுத்த விவசாயிகள் சேலைகளை வேலியாக பயன்படுத்தியும், பரண்கள் அமைத்து இரவில் காவல் காக்கும் நிலை உள்ளது.காபி தோட்டங்களில் புகும் மாடுகள் கொம்புகளில் சிக்கும் செடிகளை வேரோடு பறித்து சேதப்படுத்துகிறது. பன்றிகள் இளம் நாற்றுக்கள், சவ்சவ் பயிர்களை சேதப்படுத்துகிறது. தொடரும் இன்னல்களால் விவசாயிகள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.விவசாயி கருப்பணன் கூறுகையில்,""கடந்த ஐந்தாண்டுகள் வளர்த்த காபி, ஆரஞ்சு செடிகளை சில நொடிகள் சேதப்படுத்திகிறது. இவற்றை கண்டு அஞ்சி தோட்டங்களில் செல்ல அச்சுறுத்தாலாக உள்ளது. வன விலங்குகளால் ஏற்படும் அழிமானங்களுக்கு வனத்துறை நிவாரணம் வழங்க வேண்டும், இவற்றின் போக்கை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

### பருவம் தவறி பூத்தது காபி விவசாயிகள் கவலை

தாண்டிக்குடி: பருவம் தவறி பூத்த காபியால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி கீழ்பழநி மலைப்பகுதியில் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பில் காபி விவசாயம் செய்யப்படுகிறது. நடப்பாண்டில் பருவ மழை பொய்த்து வறண்ட வானிலை நீடித்தது. இதற்கு மத்தியில் துவங்கிய காபி சீசனில் பழங்கள் பறிக்கும் பணி மந்தகதியில் நடந்து வந்தது. ஓரளவு விலையை எதிர்பார்த்த விவசாயிகளுக்கு மழையை போன்றே விலையிலும் ஏமாற்றம் கிடைத்தது. சீசன் நிறைவு சமயத்தில் கடந்த வாரம் பெய்த 2.செ.மீ., மழையால் காபி அரும்புகள் 50 சதவிகிதம் பூவாக மலர்ந்தது. முன்னதாக பூத்தது வரும் ஆண்டில் சீசனை பாதிக்கும் என்ற கருத்து விவசாயிகள் மத்தியில் கவலையடைய செய்துள்ளது.மண்டல காபி ஆராய்ச்சி நிலைய துணை இயக்குனர் ஸ்ரீதரன் கூறுகையில்,""சீசன் முழுமை பெறாத நிலையில் காபி பூத்துள்ளது. நல்ல மழைக்கு பின்னே பூத்துள்ளதால் பாதிக்க வாய்ப்பில்லை. 50 சதவிகித பூக்கள் மட்டுமே பூத்துள்ளது. வரும் மாதங்களில் பெய்யும் மழைக்கு பின் எஞ்சியுள்ள பூக்கள் பூக்கும். இதுபோன்ற மாறுபட்ட பூக்களால் பழங்கள், முன்பின்னாக வரும் (ரன்னிங் கிராப்),""என்றார்.

### நீர்ப்பாசன கருத்தரங்கு

பழநி: தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றம், பழநியாண்டவர் கல்லூரி சார்பில், மாநில அளவிலான ஒரு நாள் பயிற்சி முகாம் "நீர்பாசனத்தில் மேலாண்மை' என்ற தலைப்பில் நடந்தது. பழநி கோயில் துணைகமிஷனர் ராஜமாணிக்கம் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் பிரபாகர் பேசினார். மதுரை காமராஜ் பல்கலை சுற்றுச்சூழல், பொருளியல் துறை தலைவர் சுவாமிக்கண்ணன், தாராபுரம் வேளாண் மை பொறியியல் துறை உதவிப் பொறியாளர் யுவராஜ தட்சிணாமூர்த்தி, பழநி வேளாண்மை அலுவலர் காளிமுத்து ஆகியோர் பங்கேற்றனர்.நீர்பாசன தொழிற்நுட்ப முறைகள் குறித்து பேசினர். தொழில் நுட்ப பயிற்சியில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து விவசாயிகள் பங்கேற்றனர். கருத்தரங்கு ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் காண்டீபன் செய்திருந்தார்.

## சம்பா சாகுபடி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர்: சம்பா சாகுபடி செய்த அனைத்து விவசாயிகளுக்கும், 20 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கக்கோரி, தஞ்சையில் விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சம்பா சாகுபடி மேற்கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு, 20 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கக்கோரி, தஞ்சாவூர் பனகல் கட்டிடம் முன், தமிழக விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை வகித்து, தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் சிவசாமி பேசியதாவது:

தஞ்சாவூர் மாவட்டத்தில், மூன்று லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப்பட்டு, முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், 12 ஆயிரம் ஏக்கருக்கு மட்டுமே, 15 ஆயிரம் ரூபாய் வீதம் இழப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பரப்பளவுக்கு ஏதுவுமே கிடைக்காமல், தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளை ஏமாற்றியதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மேட்டூர் அணை தாமதமாகத் திறக்கப்பட்டதால், விவசாயிகளும் சம்பா சாகுபடியை காலம் தாழ்ந்து துவங்கினர். இதனால், ஃபிப். 15ம் தேதி வரை தண்ணீரை திறந்து விட்டிருக்க வேண்டும். ஆனால் ஜனவரி மாதமே தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் பயிர்கள் அனைத்தும் காய்ந்து விட்ட நிலையில், 12 ஆயிரம் ஏக்கருக்கு மட்டுமே இழப்பீடு என்பது, எந்த அடிப்படையில் அறிவிக்கப்பட்டது.

பம்புசெட் வைத்துள்ள விவசாயிகளை தவிர, ஆற்றுப்பாசனத்தை நம்பி சாகுபடி மேற்கொள்ளப்பட்ட, மூன்று லட்சம் ஏக்கர் முழுவதும் பாதிக்கப்பட்டது. பம்பு செட் வைத்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும், மும்முனை மின்சாரம் முழுமையாகக் கிடைக்காததால், மகசூல்

இழப்பு ஏற்பட்டுள்ளது.

அரசுக்கு அலுவலர்கள் தவறான புள்ளிவிவரங்களைக் கூறியுள்ளனர். அதைத் தமிழக அரசு ஏற்று, நிவாரணம் அறிவித்துள்ளது. இதனால் விவசாயிகள் வாழ்க்கையை நடத்துவதுக்கும், மருத்துவச் செலவு மேற்கொள்வதுக்கும், கல்வி கட்டணத்தைச் செலுத்துவதுக்கும் வழியில்லாமல் தவிக்கின்றனர்.

எனவே பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும். இதற்கு, 2,500 கோடி ரூபாய் மட்டுமே செலவாகும். அரசுக்கு ஆண்டுக்கு, 1.25 லட்சம் கோடி ரூபாய் வருவாய் கிடைப்பதால், இந்த, 2,500 கோடி ரூபாயை தரமுடியும். அனைவருக்கும் இழப்பீடு வழங்காவிட்டால், மக்களை திரட்டி மிகப் பெரிய அளவில் போராட்டம் நடத்தப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் ராம கவுண்டர், மாவட்ட தலைவர் சுகுமாறன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

28.02.2013 A.M

## சணல் பொருட்கள் ஏற்றுமதி ரூ.3 ஆயிரம் கோடிக்கு இலக்கு



கரூர் : கரூரில் கைத்தறி ஏற்றுமதி துணி உற்பத்தியாளர் சங்கம், டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி, தென்னிந்திய சணல் பொருள் உற்பத்தியாளர் சங்கம், சிறு, குறு தொழில்முனைவோர் இணைந்து நடத்திய மாநில அளவிலான சணல் உற்பத்தியாளர், விற்பனையாளர் கண்காட்சி நேற்று நடைபெற்றது. ஏற்றுமதி துணி உற்பத்தியாளர் சங்க தலைவர் காளியப்பன் தலைமை வகித்தார். விழாவில் பங்கேற்ற தென்னிந்திய சணல் பொருட்கள் உற்பத்தியாளர் சங்க செயலாளர் பூபாலன் கூறியதாவது:

சணல் பொருட்களை பயன்படுத்தி மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது தென்னிந்தியாவில் அதிகம் நடக்கிறது. கடந்த ஆண்டு ரூ.2,500 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. நடப்பாண்டில் ரூ.3,000 கோடிக்கு ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறு பூபாலன் கூறினார்.

## ரப்பர் இறக்குமதி வரியை உயர்த்தியது மத்திய அரசு



கொச்சி : உள்நாட்டில் ரப்பர் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் இருந்து ரப்பர் இறக்குமதி செய்யப்படுவதால், உள்நாட்டில் விலை மேலும் சரிய வாய்ப்புள்ளது. இதனால், இயற்கை ரப்பர் இறக்குமதி செய்ய கிலோவுக்கு ரூ.20 என்றிருந்த குறைந்தபட்ச வரியை, கிலோவுக்கு ரூ.34 என மத்திய அரசு நேற்று உயர்த்தியுள்ளது. இதற்கு டயர் உற்பத்தியாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். டயர் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ஆனந்த் கோயங்கா வெளியிட்ட அறிக்கையில், 'ரப்பர் தேவையை உள்நாட்டு உற்பத்தி ஈடு செய்ய முடியாத நிலையில், இறக்குமதிக்கு வரி விதிப்பது டயர் தொழிற்சாலைகளை கடுமையாக பாதிக்கும்' என கூறியுள்ளார்.

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவாரூர், : திருவாரூரில் நாளை (28ம் தேதி) மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது. திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 28ம் தேதி (நாளை) திருவாரூர் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. கலெக்டர் நடராஜன் தலைமை வகிக்கிறார். இக்கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்கள் பகுதியில் உள்ள குறைகளை தெரிவித்து பயன்பெறலாம்.இத்தகவலை கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார். –

## எஸ்சி, எஸ்டி விவசாயிகள் குழுவிற்கு ரூ.9.2 லட்சம் மானியத்தில் பவர் டில்லர்

தர்மபுரி,: தர்மபுரி மாவட்ட வேளாண்துறை சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலஉதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் குழுக்களுக்கு ரூ.9.2 லட்சம் மானியத்தில் பவர் டில்லர்கள் வழங்கும் விழா நேற்று நடந்தது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் லில்லி கலந்து கொண்டு 8 பவர் டில்லர்களை விவசாயிகள் குழுக்களுக்கு வழங்கினார். அப்போது, தர்மபுரி மாவட்டத்தில் 8 வட்டாரங்களில் 15 பேர் கொண்ட குழுக்களுக்கு தலா ஒரு பவர் டில்லர் வீதம் 8 பவர் டில்லர் வழங்கப்பட்டுள்ளதாக

ஆட்சியர் கூறினார். இக்கருவிகளை வாடகைக்கு விட்டு அதன் மூலம் நிலையான வருமானம் பெற்று பயனடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் தெரிவித்தார். விழாவில் வேளாண் இணை இயக்குனர் மனோகரன், துணை இயக்குனர்கள் வேணுகோபால், மேகநாதன், கனகசபை மற்றும் உதவி இயக்குனர்கள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் கருப்பையா செய்திருந்தார். –

## மீன்கள் வளர்க்கும் குளங்களை சீரமைக்க ரூ.1.50 லட்சம் மானியம் 7 விவசாயிகள் பயன்

காரைக்கால், : காரை க்கால் மாவட்டத்தில் மீன் வளர்ப்போருக்கான குளங்களை சீரமைக்க 7 பேருக்கு ரூ.1.50லட்சம் மானியதொகையை கலெக்டர் அசோக்குமார் வழங்கினார்.

புதுச்சேரி மீன் வளத்துறையின் கீழ் இயங்கும், காரைக்கால் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை சார்பில், காரைக்கால் மாவட்டத் தை சேர்ந்த மீன் வளர்ப்பு விவசாயிகளுக்கு, குளங்களை சீரமைக்கவும், ஆழப்படுத்தி மீன்களை வளர்க்கவும் மானிய உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி காரைக்காலில் நடைபெற்றது.

மாவட்ட கலெக்டர் அசோக்குமார் தலைமை வகித்து, மீன் வளர்ப்பு குளங்களை சீரமைக்க 7 பயனாளிகளுக்கு ரூ.1.50 லட்சம் மானிய தொகையை வழங்கினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மீன் வளர்ப்போர் மேம்பாடு முகமை முதன்மை நிர்வாக அதிகாரி சம்பத் நிருபர்களிடம் கூறியதாவது:

கடந்த 24 ஆண்டுகளாக மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. உள்ளூரில் மீன் வளர்ப்பை அதிகரிக்கவும், உள்ளூர் மக்களுக்கு புரத சத்தான மீன் அதிகளவில் கிடைக் கவும் தனிக்கவனம் செலுத்தி வருகிறோம். அதன் ஒரு பகுதியாக, காரைக்கால் மாவட்டத்தில் ஓடும் ஆறுகளில் 11 லட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளது. விரை வில் ஒரு லட்சம் மீன் குஞ்சுகளை காரைக்கால் கடல் மற்றும் ஆறுகளில் விட திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், உள் நாட்டு மீனவர்கள் நலன் கருதி ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு, கொடுவா, கடல்விரால், நன்னீர் இறால், நண்டு வளர்ப்பு குறித்த சிறப்பு பயிற்சிகளை வழங்கி வருகிறோம். இதுதவிர, மீன் வளர்போர் புதிய குளம் அமைக்க எக்டேருக்கு ரூ.60 ஆயிரமும், குளங்களை சீரமைக்கும் பணிக்கு எக்டேருக்கு ரூ.15 ஆயிரமும் மானிய மாக வழங்கப்படுகிறது என்றார். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## பவானிசாகர் நீர்மட்டம் வீழ்ச்சி

பவானிசாகர், : ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீராதாரமாக விளங்கும் பவானி சாகர் அணை நீர்மட்டம் மிகவும் குறைந்து போனதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பவானிசாகர் அணை 105 அடி உயரம் கொண்டது. கொள்ளளவு 32 டிஎம்சி தண்ணீர். பவானி

ஆற்றின் மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காளிங்கராயன் வாய்க்கால் பாசனமும்.
கீழ்பவானி பிரதான வாய்க்கால் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களில் மொத்தம் 2.5 லட்சம் நிலம் பாசனம் பெறுகிறது. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் ஆகஸ்ட் 15 ல் திறக்கப்பட வேண்டிய தண்ணீர் திறக்கப்படவில்லை. கீழ்பவானி பாசனப்பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டதால் விவசாயிகள் கோரிக்கை ஏற்று மூன்று முறை உயிர்த் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கடந்த 7ம் தேதி நீர்மட்டம் 43.68 அடியாக இருந்தது.
1600 கனஅடி வரத்து இருந்தது. 7ம் தேதி முதல் 17ம் தேதி வரை உயிர் தண்ணீர் கீழ்பவானி வாய்க்காலில் திறந்து விடப்பட்டுள்ளது.
இதனால், நீர்மட்டம் மளமளவென சரிந்தது. தற்போது நீர்மட்டம் நேற்று மாலை நிலவரப்படி 33.80 அடியாக இருந்தது. நீர்வரத்து 155 கனஅடியாக உள்ளது.
பவானி ஆற்றில் 150 கனஅடியும் கீழ்பவானி வாய்க்காலில் 5 கனஅடி தண்ணீரும் குடிநீர் தேவைக்காக திறந்து விடப்படுகிறது. பவானி ஆற்றில் பவானிசாகர், சத்தியமங்கலம், கொடிவேரி, கோபி, பவானி வரை 50க்கும் மேற்பட்ட குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.
கீழ்பவானி வாய்க்காலில் இருந்து புளியம்பட்டி ஊராட்சிக்கு குடிநீர் திட்டம் செயல்பட்டு வருகிறது.
பவானிசாகர் அணையில் தண்ணீர் இருப்பு வெகுவாக குறைந்ததால் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய இயலுமா என்பதே கேள்விக்குறியாக மாறி இருக்கிறது.

இன்றைய வேளாண் செய்திகள்

28.02.2013 A.M

---

## கோடைக்காலத்தில் தண்ணீர் பற்றாக்குறையை பயன்படுத்தி விவசாயிகள் அதற்கேற்ற பயிர்களை தேர்வு செய்து பயிரிட வேண்டும் கருத்தரங்கில் கலெக்டர் பேச்சு

சேலம்,

கோடைக்காலத்தில் தண்ணீர் பற்றாக்குறையை பயன்படுத்தி விவசாயிகள் அதற்கேற்ற பயிர்களை தேர்வு செய்து பயிரிட வேண்டும் என்று கலெக்டர் மகரபூஷணம் கூறினார்.

### கருத்தரங்கு

சேலம் அழகாபுரத்தில் உள்ள சேலம் மாவட்ட கூட்டுறவு வங்கியின் சமுதாய கூடத்தில் கூட்டுறவு துறை மற்றும் வேளாண்மைத்துறை இணைந்து நடத்திய கோடைப்பண்ணையம் கருத்தரங்கு நடந்தது. இதில், 300–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இந்த கருத்தரங்கிற்கு சேலம் மாவட்ட கலெக்டர் மகரபூஷணம் தலைமை தாங்கி விவசாயிகளின் கருத்துக்களை கேட்டறிந்தார். இதைத்தொடர்ந்து அவர் பேசியதாவது:–

### 5 லட்சம் மரக்கன்றுகள்

கோடைக்காலத்தில் தண்ணீர் பற்றாக்குறையை பயன்படுத்தி விவசாயிகள் அதற்கேற்ற பயிர்களை தேர்வு செய்து பயிரிட வேண்டும். இனி வரவிருக்கும் தென்மேற்கு பருவமழையை பயன்படுத்தி நமது மாவட்டத்தில் குறைந்த பட்சம் 5 லட்சம் மரக்கன்றுகளை நட்டு வளர்க்க வேண்டும்.

விவசாயிகள் நல்ல விளைச்சல் உள்ள காலத்தில் வாங்கிய பயிர்க்கடன்களை திரும்ப செலுத்தாமல் நிலுவையாக வைத்து விடுவதால் இதுபோன்ற வறட்சி காலங்களில் அந்த கடன்களை திரும்ப செலுத்த இயலாமல் தவணை தவறிய கடன்களாக மாறி வசூல் நடவடிக்கைக்கு விவசாயிகள் ஆளாகி விடுகிறார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

கருத்தரங்கில் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் செயல் கலெக்டர் கரிகாலன் கலந்து கொண்டு பேசினார். இதில் மாவட்ட வருவாய் அதிகாரி பிரசன்ன வெங்கடேசன், சேலம் மண்டல இணைப்பதிவாளர் லட்சுமி, சரகத் துணைப்பதிவாளர்கள் ரவிக்குமார், ராஜ்குமார், மாவட்ட வேளாண் இணை இயக்குனர் செங்கோட்டுவேல், கூட்டுறவு வங்கியின் முதன்மை வருவாய் அலுவலர் தமிழ்நங்கை, பொதுமேலாளர் தனஜெயன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோவை தேயிலை வர்த்தக மையத்தில் தேயிலை தூளின் சராசரி ஏல விலை ரூ.100–ஆக உயர்வு

கோவை,

கோவையில் உள்ள தேயிலை வர்த்தக மையத்தில் நடைபெற்ற ஏலத்தில் தேயிலை தூளின் சராசரி ஏல விலை ரூ.100–ஆக உயர்ந்து உள்ளது.

தேயிலை தூள் ஏலம்

இது தொடர்பாக கோவை தேயிலை வர்த்தக மைய செயலாளர் ஸ்ரீகுமார் கூறியதாவது:–

கோவை–மேட்டுப்பாளையம் ரோடு ஜி.என்.மில்ஸ் பகுதியில் தேயிலை வர்த்தக மையம் உள்ளது. இங்கு வாரந்தோறும் மின்னணு முறையில் தேயிலை தூள் ஏலம்(இ–ஆக்சன்) நடைபெற்று வருகிறது. அதன்படி மின்னணு ஏல முறையில் 8–வது தேயிலை தூள் மற்றும் தேயிலை விற்பனை வர்த்தக மையத்தில் நடைபெற்றது.

இதில் டஸ்ட் ரக தேயிலை தூள் 1 லட்சத்து 99 ஆயிரத்து 883 கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வந்தது. இதில் 1 லட்சத்து 89 ஆயிரத்து 194 கிலோ ஏலத்தில் எடுக்கப்பட்டது. இதன் விற்பனை மதிப்பு கடந்த வாரம் 99 சதவீதமாக இருந்தது. இந்த வாரம் 4 சதவீதம் குறைந்து 95 சதவீதம் விற்பனையானது.

விற்பனை அதிகரிப்பு

கடந்த ஏலத்தின் சராசரி விற்பனை விலை ரூ.98.60 சதவீதத்தை விட, இந்த வார சராசரி விற்பனை ரூ.100.52 சதவீதமாக அதிகரித்து உள்ளது. இது கடந்த வாரத்தை விட 1.92 சதவீதம் அதிகம் ஆகும். இதன் விற்பனை மதிப்பு 1 கோடியே 90 லட்சத்து 17 ஆயிரத்து 780 ரூபாய் 88 பைசா ஆகும்.

இதேபோல் இலை ரக தேயிலை 1 லட்சத்து 58 ஆயிரத்து 633 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 1 லட்சத்து 45 ஆயிரத்து 17 கிலோ ஏலம் மூலம் விற்பனையாகி உள்ளது. இதன் விற்பனை மதிப்பு 91 சதவீதம் ஆகும்.

ரூ.3¼ கோடிக்கு விற்பனை

கடந்த சராசரி விற்பனை விலை 96.80 சதவீதமாக இருந்தது. இந்த வார விற்பனை 97.65 சதவீதமாக சராசரி விகிதம் ஆகும். இது 0.85 சதவீதம் அதிகம் ஆகும். இந்த ரகத்தின் விற்பனை மதிப்பு 1 கோடியே 41 லட்சத்து 60 ஆயிரத்து 910 ரூபாய் 5 பைசா ஆகும். தூள் மற்றும் இலை ரக தேயிலை ஏல விற்பனையின் ஒட்டு மொத்த மதிப்பு 3 கோடியே 31 லட்சத்து 78 ஆயிரத்து 690 ரூபாய் 93 பைசா ஆகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## அரசு நிவாரணத்தொகையால் நாகை மாவட்டத்தில் 1 லட்சம் விவசாயிகள் பலன் அடைவார்கள் அமைச்சர் ஜெயபால் பேச்சு

நாகப்பட்டினம்,

அரசு நிவாரணத்தொகையால் நாகை மாவட்டத்தில் 1 லட்சம் விவசாயிகள் பலன் அடைவார்கள் என்று அமைச்சர் ஜெயபால் கூறினார்.

பயிர் நிவாரணம் வழங்கும் விழா

நாகையை அடுத்த சிக்கல் கோவில் திருமணமண்டபத்தில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கலெக்டர் முனுசாமி தலைமை தாங்கினார். மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

விவசாயம் பாதிப்பு

மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததாலும், காவிரியில் நீர் வரத்து குறைவாக இருந்ததாலும் குறுவை விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. எனவே சம்பா பயிரையாவது காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் நிலத்தடி நீர் உள்ள இடங்களில் சமுதாய நாற்றங்கால் திட்டம், மற்ற இடங்களில் நேரடி நெல் விதைப்பு திட்டம் ஆகியவற்றை கொண்ட சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டத்தை முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார்.

அதன்படி சம்பா பயிரிடப்பட்டு நன்றாக பயிர்கள் வளர்ந்து வந்த நிலையில் அக்டோபர் மாதம் பெய்த கன மழையால் பயிர்கள் நீரில் மூழ்கின. அதை தொடர்ந்து டிசம்பர் மாத இறுதிவரை மழை இல்லாமல் பயிர்கள் கருகின. தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்ட பயிர்களை காப்பாற்ற தெளிப்பு நீர்ப்பாசனம், டீசல் மானியம், குளம் குட்டைகளில் இருந்து வயலுக்கு நீர் இறைக்க வசதியாக முழு மானியத்துடன் குழாய்கள், பயிர் காப்பீட்டுத் தொகை என பல்வேறு சலுகைகள் அரசால் வழங்கப்பட்டன.

ரூ.2½ கோடி நிவாரணம்

முதல்–அமைச்சர் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டுள்ளது. 50 சதவீதத்திற்கு மேல் பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் நிவாரணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15 ஆயிரம் அறிவித்தார். கடைமடை பகுதியான நாகை மாவட்டத்திற்கு மட்டும் ரூ.272 கோடியே 60 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 1 லட்சம் விவசாயிகள் பலன் அடைவார்கள். இந்த பயிர் நிவாரணம் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியில் இருந்து அந்தந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு அனுப்பப்பட்டு, விவசாயிகளின் வங்கி கணக்கில் இ.சி.எஸ். மூலம் அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு அமைச்சர் ஜெயபால் கூறினார்.

விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆசியாமரியம், உதவி கலெக்டர் மணிகண்டன், வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன், கூட்டுறவுத்துறை துணை பதிவாளர் ராஜேஷ், ஒன்றிய குழு உறுப்பினர் தங்க.கதிரவன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பயிர் இழப்பு பற்றி மறு ஆய்வு நடத்தி கூடுதல் நிவாரணம் வழங்க வேண்டும் நாகை மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தல்

நாகப்பட்டினம்,

பயிர் இழப்பு பற்றி மறு ஆய்வு நடத்தி கூடுதல் நிவாரணம் வழங்க வேண்டும் என்று நாகை மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தினர்.

குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நாகை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் முனுசாமி தலைமை தாங்கினார். இதில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து

கொண்டு, கோரிக்கைகள் தொடர்பான கருத்துகளை தெரிவித்தனர். கூட்டத்தில் விவசாயிகள் பேசிய விவரம் வருமாறு:–

மறு ஆய்வு

சம்பந்தம் (தலைஞாயிறு):– கீழ்வேளூர், கீழையூர், திருமருகல் ஒன்றியங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி கொடுக்கவேண்டும். நெல் பயிரிட முடியாமல் எள், பயறு போன்ற மாற்று பயிர் செய்த விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

குருகோபிகணேசன் (சங்கரன்பந்தல்):– நிவாரணம் வழங்குவதற்கான பயிர் இழப்பு மதிப்பீட்டில் மயிலாடுதுறை, குத்தாலம் தாலுகாக்களில் குறைவான அளவே பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த பகுதிகளில் மறு ஆய்வுப்பணி மேற்கொள்ள வேண்டும்.

அலெக்சாண்டர் (மயிலாடுதுறை):– வேளாண்மை துறை அதிகாரிகள் நேரடி ஆய்வு செய்யாமல் நிவாரணம் பற்றி தவறான அறிக்கையை அளித்துள்ளனர். கரும்பு விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

கூடுதல் நிவாரணம்

ஆறுபாதி கல்யாணம்:– பயிர்க்காப்பீடு இழப்பீட்டை சேர்க்காமல் பேரிடர் நிதி, காவிரி சிறப்பு கூடுதல் நிவாரணம் இணைத்து ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் வழங்க வேண்டும்.

ராஜேந்திரன்(கீழ்வேளூர்):– கீழ்வேளூர் ஒன்றியம் கிள்ளுக்குடியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

ராஜதுரை(சீர்காழி):– உழவு மானியம், டீசல்மானியத்திற்கான காசோலைகள் இதுவரை வழங்கப்படவில்லை. இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் தலைமையில் நடைபெற்றது

கரூர்

கரூரில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடைபெற்றது.

**கூட்டம்**

கரூர் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கலெக்டர் கூட்டரங்கில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு கலெக்டர் ஜெயந்தி தலைமை தாங்கினார்.

வருவாய் அதிகாரி கிறிஸ்துராஜ், வேளாண்மை துறை இணை இயக்குனர் தெய்வேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு கலெக்டர் பதில் அளித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

பழுதாகி உள்ள மேட்டுக்கட்டளை வாய்க்கால் படித்துறை இந்த நிதி ஆண்டில் சரி செய்யப்படும்.

சாயக்கழிவு நீரால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு 2வது தவணையாக இழப்பீடு தொகை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**கண்காணிக்கப்பட்டு வருகிறது**

வாடும் பயிர்களை காப்பாற்ற தென்கரை மற்றும் கட்டளை மேட்டு வாய்க்கால் களில் தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.

தேசிய நெடுஞ்சாலைக்கு நிலம் எடுத்தவர்களுக்கு, உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காவிரி ஆற்றில் மணல் எடுப்பது, பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இதே போன்று விவசாயி களின் பல்வேறு கோரிக்கை மனுக்களுக்கு கலெக்டர் பதில் அளித்தார்.

**உரங்கள்**

மேலும் கரூர் மாவட்டத்தின் சராசரி மழையளவு 652.2 மில்லி மீட்டர் ஆகும். பிப்ரவரி மாதத்தில் 7.28 மில்லி மீட்டர் என்ற இயல்பான மழை அளவை காட்டிலும் இரண்டு மடங்கு கூடுதலாக 17.25 மில்லி மீட்டர் மழை பெய்து உள்ளது. கடந்த மாதம் வரை 10,990 ஹெக்டேர் நெல், 9,654 ஹெக்டேர் சிறுதான்யம், 7,338 ஹெக்டேர் பயறு வகைகள், 8,370 ஹெக்டேர் எண்ணெய் வித்துக்கள், 6,147 ஹெக்டேர் கரும்பு பயிரிடப் பட்டு உள்ளது.

இதே போன்று அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் 12 டன் பயறு விதைகள் இருப்பில் உள்ளது. அதே போன்று 740 டன் யூரியா, 411 டன் டிஏபி, 629 டன் பொட்டாஷ், 1,456 டன் காம்ப்ளக்ஸ் இருப்பில் உள்ளது என்று கூறினார்.

**வெளியேறுவோம்**

முன்னதாக கூட்டம் தொடங்கியதும் கரூர் மாவட்ட நிலத்தடி பாதுகாப்பு மற்றும் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்கத்தினர் பலர் எழுந்து கலெக்டர் முன்பு கூடி சாய் கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும். இன்னும் 1 மாத காலத்தில் வழங்கவில்லை என்றால், பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்கள் ரேசன் கார்டுகளை கலெக்டரிடம் ஒப்படைத்து விட்டு, கிராமங்களில் இருந்து வெளியேறுவோம்.

மேலும் காவிரி ஆற்றில் வரையறுக்கப்பட்ட நேரங்களை தவிர மற்ற நேரங்களில் மணல் அள்ளப் படுகிறது. இதை கண்காணிக்க வேண்டும் என்பது போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை கொடுத் தனர்.

மனுவை பெற்றுக்கொண்ட கலெக்டர் நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

அதன் பிறகு விவசாயிகள் அங்கிருந்து கலைந்து சென்று விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கிருஷ்ணராயபுரம், குளித்தலை வட்டத்தை சேர்ந்த 51 விவசாயிகளுக்கு ரூ.8¾ லட்சம் வறட்சி நிவாரணம் அமைச்சர் செந்தில்பாலாஜி வழங்கினார்

கரூர்,

வறட்சியால் பாதிக்கப் பட்ட கிருஷ்ணராயபுரம், குளித்தலை வட் டத்தை சேர்ந்த 51 விவசாயிகளுக்கு ரூ. 8 லட்சத்து 75 ஆயிரத்து 100 நிவாரண தொகையினை அமைச்சர் செந்தில் பாலாஜி வழங்கி வறட்சி நிவாரண நிதி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

**வறட்சி நிவாரணம்**

தமிழக முதல்அமைச்சர் வறட்சியால் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டா பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க உத்தரவிட்டார்.

அதன்படி கரூர் மாவட்டம் குளித் தலை வருவாய் கோட்டம், குளித்தலை மற்றும் கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் 395 ஏக்கர் நிலப்பரப்பில் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு வறட்சி நிவாரணத் தொகையாக ரூ.59 லட்சத்து 25 ஆயிரம் நிதியினை 304 விவசாயி களுக்கு வழங்க உத்தர விட்டார்.

**51 விவசாயிகளுக்கு**

தமிழக முதல்அமைச்சரின் உத்தரவினை தொடர்ந்து அமைச்சர் செந்தில் பாலாஜி கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கடந்த 25ந் தேதி குளித்தலை வருவாய் கோட்ட ம் திருகாம் புலியூர் கிராமத்தை சேர்ந்த வறட்சி யால் பாதிக்கப்பட்ட 8 விவசாயிகளுக்கு ரூ.1 லட்சத்து 48 ஆயிரத்து 200ம், கிருஷ்ணராய புரத்தை சேர்ந்த 24 விவசாயிகளுக்கு ரூ.4 லட்சத்து 27 ஆயிரத்து 950ம், மகாதானபுரத்தை சேர்ந்த 19 விவசாயிகளுக்கு ரூ.2 லட்சத்து 98 ஆயிரத்து 950ம், மொத்தம் 51 விவசாயிகளுக்கு ரூ.8 லட்சத்து 75 ஆயிரத்து 100 வறட்சி நிவாரண நிதி யினை வழங்கி, வறட்சி நிவாரண நிதி வழங்கும் திட் டத்தை தொடங்கி வைத் தார்.

**கலந்து கொண்டவர்கள்**

நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி குளித் தலை சட்டமன்ற உறுப்பினர் பாப்பாசுந்தரம், மாவட்ட ஊராட்சி தலைவர் கீதா மணி வண்ணன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், கிருஷ்ண ராயபுரம் பி.கே. முத்துசாமி, குளித்தலை நளினி கலைமணி, கூட்டுறவு இணைப் பதிவாளர் சந்தானம், வேளாண்மை இணை இயக்குனர் தெய்வேந் திரன், வருவாய் கோட் டாட்சி யர்கள் சிவசவுந்திர வல்லி, நெல்லை வேந்தன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருமானூர் ஒன்றிய பகுதியில் பயிர்கள் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

திருமானூர்

திருமானூர் ஒன்றிய டெல்டா பகுதியில் பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவ ருக்கும் பாரபட்சமின்றி வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வறட்சி நிவாரணம்**

தற்போது நிலவி வரும் வறட்சியினாலும், புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் வராத தாலும், விவசாய மின் மோட் டார் பாசன பகுதிகளுக்கு மும்முனை மின்சாரம் தாமத மாக வழங்கியதாலும் திரு மானூர் ஒன்றிய பகுதியில் சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்படாத நிலைக்கு விவசாயிகள் ஆளாகி விட் டார்கள். மேலும் கொள்ளிட கரையோர கிராமங்களில் மின் மோட்டாரை பயன் படுத்தி நெல் பயிரிடும் பகுதி யில் வழக்கத்திற்கு மாறாக பாதியளவு தான் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் வறட்சியால் பாதிக்கப்பட்ட திருமானூர் ஒன்றிய கொள்ளிட கரையோர டெல்டா பகுதியில் உள்ள செம்பியக்குடி, குலமாணிக்கம், இலந்தைக்கூடம், திருமழபாடி, தூத்தூர் வரையிலான 26 வருவாய் கிராமங்களில் பாதிக்கப் பட்ட சுமார் 7 ஆயிரத்து 747 ஏக்கருக்கு அரசு ரூ.11 கோடி வறட்சி நிவாரணம் ஒதுக்கியுள்ளது. இதில் திருமானூர் ஒன்றியத் தில் உள்ள 12 கூட்டுறவு வேளாண் துறை வங்கிகளின் மூலம் பாதிக்கப்பட்ட விவ சாயிகளுக்கு கிராம நிர்வாக அதிகாரிகளின் பரிந்துரை மூலம் வறட்சி நிவாரணம் வழங்கப்படுகிறது.

**அனைவருக்கும் கிடைக்குமா?**

ஆனால் அரசு விவசாயிக ளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் ஒதுக்கியும் அதனை விவசாயி கள் பெற முடியாத நிலையில் உள்ளனர். காரணம் திரு மானூர் ஒன்றிய டெல்டா பகு திக்கு அரசு நிவாரணம் ஒதுக்கி கூட்டுறவு வங்கிகளின் மூலம் வழங்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப் பட்ட நிதி பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கி சேமிப்பு கணக்கில் ஏற்றப்பட்டுள்ள நிலையில் தற்போது கூட்டுறவு வங்கிகளில் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு மட் டும் நிவாரணம் வழங்கப் பட வேண்டும் என்ற அதிகாரிக ளின் திடீர் உத்தரவால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

சில மாதங்களுக்கு முன் அரசு அறிவித்த வான் பயிர் காப்பீடு திட்டத்தில் திரு மானூர் ஒன்றியத்தில் நெல் பயிர் செய்த விவசாயிகள் மட்டும் சுமார் ஆயிரம் ஏக்கருக்கு, ரூ.200 வீதம் பயிர் பாதுகாப்பீடு செய்யப் பட்டுள்ளது. தற்போது தமிழக அரசு அறிவித்துள்ள வறட்சி நிவாரணம் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிக ளில் மட்டும் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு மட்டும் வழங்கப்படும் என கட்டாயத்திற்கு உட்படுத்தப் பட்டுள்ள நிலையில் தற்போது வான் பயிர் பாதுகாப்பு திட்டத்தில் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு அரசு அறிவித்துள்ள வறட்சி நிவா ரணம் கிடைக்குமா? என்ற கேள்விக்குறியில் விவசாயிகள் உள்ளனர்.

**விவசாயிகள் கோரிக்கை**

எனவே தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும், கூட்டுறவுத்துறை அதிகாரி களும் திருமானூர் ஒன்றிய டெல்டா பகுதியில் பாதிக்கப் பட்ட அனைத்து விவசாயி களுக்கும் அரசு அறிவித்த வறட்சி நிவார ணத்தை எந்த வித பிடித்தமும் இல்லா மல் வழங்க வேண் டும் என திருமானூர் ஒன்றிய டெல்டா பகுதியின் பாதிக்கப் பட்ட விவ சாயிகள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

**விருதுநகர் பாராளுமன்ற தொகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக்கை மாணிக்கம் தாகூர் எம்.பி. அறிக்கை**

விருதுநகர்,

விருதுநகர் தொகுதியில் வறட்சியால் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம்கிடைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக மாணிக் கம் தாகூர் எம்.பி. தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

சோனியா காந்தி

தமிழகத்தில் சென்னை தவிர பிற மாவட்டங்களை வறட்சி பாதிப்படைந்த மாவட்டங்களாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத் தின் கீழ் மத்திய அரசின் விதி முறைகளின்படி கிராம மக்கள் 150 நாட்கள் வேலை பெறும் வாய்ப்பினை பெற்றுள்ளனர். ஆனால் வறட்சி பாதிப்ப டைந்த விவசாயிகளுக்கு உரிய நிவாரண உதவி கிடைக்க வில்லை. தேசிய ஆலோசனை குழு தலைவர் சோனியா காந்தியிடம் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிக ளுக்கு மத்திய அரசின் பேரிடர் நிவாரண நிதியின் மூலம் உதவி செய்திடக் கோரினேன். அவர் இது குறித்து தேசிய ஆலோசனைக்குழு செயலா ளர் திரஜ் வஸ்தவா மூலம் தமிழக அரசு வறட்சி பாதிப்பு குறித்து மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பி வைத்தால் மட்டுமே மத்திய விவசாயத் துறை அமைச்சகம் பாதிப்பு குறித்து நேரடி ஆய்வு செய் யும் என்றும், அந்த ஆய்வின் அடிப்படையில் பாதிப்பு அடைந்த விவசாயிகளுக்கு கூடுதல் பேரிடர் நிவாரண நிதி தேவைப்படின் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

நடவடிக்கை

இதற்காக விருதுநகர் மாவட் டம் மற்றும் திருப்பரங்குன்றம் மற்றும் திருமங்கலம் சட்ட மன்ற தொகுதிகளில் வறட்சி யால் விவசாயிகளுக்கு ஏற்பட் டுள்ள பாதிப்பு குறித்த தகவல் களை சேகரிக்க உள்ளோம். விவசாயிகளுக்கு உரிய நிவா ரணம் வழங்க தமிழக கவர்னரை நேரில் சந்தித்து உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்த உள்ளோம். விவ சாயிகளிடமிருந்து இது தொடர்பான தகவல்களை சேகரிக்க வட்டார அளவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளது. நானும்

கிராமங்களுக்கு சென்று விவசாயிகளுக்கு ஏற் பட்டுள்ள பாதிப்புகள் குறித்து நேரடியாக அறிய உள்ளேன்.

பாதிப்படைந்த விவசாயிகள் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து விருதுநகரில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்திலும், மதுரை திருநகரில் உள்ள நாடாளு மன்ற உறுப்பினர் அலுவலகத் திலும் நேரடியாகவோ அல் லது தபால் மூலமாகவோ தக வல் தெரிவிக்க வேண்டுகி றேன். அரசிடமிருந்து விவசா யிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்க தேவையான நடவ டிக்கைகள் எடுப்பதற்கு இந்த தகவல்கள் பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். இவ்வாறு அந்த அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.